**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. C.ஜெயபிரகாஷ், M.Com.,M.L.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2025–ஆம் வருடம் ஜுலை மாதம் 07 ஆம் நாள் திங்கட்கிழமை**

**I.A.No.766/2024**

**in**

**Original Suit No.198/2022**

**(CNR.No.TNDG19-000508-2022)**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், மார்க்கம்பட்டி கிராமம், மார்க்கம்பட்டியில் வசிக்கும் நல்லசாமிகவுண்டர் மகன் இந்து சுமார் 40 வயதுள்ள செந்தில்குமார் ... மனுதாரர்/2 ம் பிரதிவாதி

/எதிர்/

1. சென்னை 600 026, வடபழனி, சைதாப்பேட்டை ரோடு, அருணா காலனி, க.எண்.19/3–ல் வசிக்கும் கலீல்ரஹ்மான் மனைவி முஸ்லீம் சுமார் 69 வயதுள்ள கைருன்னிசா.

2. சென்னை 600 026, வடபழனி, சைதாப்பேட்டை ரோடு, அருணா காலனி, க.எண்.19/3–ல் வசிக்கும் காதர் மீரா ஹீசைன் மகன் முஸ்லீம் சுமார் 73 வயதுள்ள கே.கலீல்ரஹ்மான். ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது மனுதாரர்/2 ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 21.02.2023 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்து, அசல் வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்க உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 பிரிவு 13 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் –** 04.11.2023

**உத்தரவாணை**

இந்த மனுவானது கடந்த 04.11.2023 ம் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 13.12.202 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 04.07.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர்

திரு.K.நாட்டுத்துரை அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.G.சபிதா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் கீழ்வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகின்றது.

1) இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2) மனுதாரர்/2ம் பிரதிவாதி இம்மனுவின் செலவுத் தொகையாக ரூ.2,000/- தொகையினை எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிர்வரும் 09.07.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. மீண்டும் அழைக்க **11.07.2025.**

**சொத்து விபரம் – இல்லை**.

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 07ம் நாளாகிய இன்று என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2025.07.07 18:53:34 +0530

**சார்பு நீதிபதி,**
**ஓட்டன்சத்திரம்.**

Decreetal order
I.A.No.766/2024 in
O.S.No.198/2022
Dated : 07.07.2025